# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 121/மா/2024**

**நாள் 29.10.2024**

திரு. M.R. சுப்பிரமணியன், ... மனுதாரர்

மதுரை – 9

உதவி ஆணையர், ... எதிர்மனுதாரர்

மண்டலம் – 3 (மத்தியம்),

மதுரை மாநகராட்சி.

மதுரை மாநகராட்சி, நவரத்தினபுரம், 12வது தெரு, கதவு எண்.12/26 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.R. சுப்பிரமணியன், என்பவரது 06.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.08.2024 அன்று பெறப்பட்டு, 121/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு பின்வரும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாநகராட்சி, நவரத்தினபுரம், 12வது தெரு, கதவு எண்.12/26 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.R. சுப்பிரமணியன், 06.08.2024 நாளிட்ட தனது மனுவில்,

மதுரை மாநகர், காமராஜர் சாலை, நவரத்தினபுரம் 1வது தெரு, கதவு எண்.12/26 வீட்டில் வசித்து வருகிறேன் என்றும் எங்கள் டிரஸ்ட்டிற்கு பாத்தியப்பட்ட மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.4 வார்டு எண்.85, அம்மன் சன்னதி தெரு, கதவு எண்.52, பழைய வரிவிதிப்பு எண்.115/69712 மற்றும் புதிய வரிவிதிப்பு எண்.115/085/00459 கட்டிடத்திற்கு 2000–2001 முதல் 2021–2022 முடிய ரூ.13,55,928/– நிலுவையிருப்பதாகவும், கதவு எண்.52A பழைய வரிவிதிப்பு எண்.115/69713 மற்றும் புதிய வரிவிதிப்பு எண்.115/085/00460 கட்டிடத்திற்கு 1999–2000 முதல் 2021–2022–2வது அரையாண்டு முடிய ரூ.18,79,691/– நிலுவையிருப்பதாக அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த நிலையில் கதவு எண்.52, பழைய வரி எண்.115/69712 மற்றும்

புதிய வரி விதிப்பு எண்.115/035/00459 கட்டிடத்திற்கு 01.04.2008 முதல் அரைவருட வரியாக ரூ.42,932/– என்றும் கதவு எண்.52A, பழைய வரிவிதிப்பு எண்.115/69713 மற்றும் புதிய வரிவிதிப்பு எண்.115/085/00460 கட்டிடத்திற்கு 01.04.2008 முதல் ரூ.62,252/– என்றும் வரிவிதிப்பு செய்யப்பட்ட கணக்கீடு படிவம் சார்வு செய்யப்பட்டது என்றும், மேற்படி 2 கணக்கீடு படிவங்கள் மற்றும் நிலுவை பட்டியல்களை ஆட்சேபித்து 28.12.2023ல் ஆட்சேபணை மனு சமர்ப்பித்தேன். ஆனால் தன்னுடைய ஆட்சேபணை மனு பரிசீலிக்காமலேயே எங்களிடமிருந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, நீதிப்பேராணை எண்.163/2012, தீர்ப்பு நாள் 08.09.2020ன் பிரகாரம், மாநகராட்சியால் ரூ.1,00,000/–ற்குண்டான காசோலை பெறப்பட்டது எனவும், எனவே எங்கள் மனுவின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், ஜப்தி நடவடிக்கைக்கு அதிகாரிகள் வந்ததால், கனரா வங்கி காசோலை எண்.673478, நாள் 12.03.2024ன் பிரகாரம் ரூ.10,00,000/–ம் கனரா வங்கி காசோலை 673479ன் பிரகாரம் ரூ.5,00,000/–ம் ஆக மொத்தம் ரூ.16,00,000/– மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மேலும் 1971ம் வருடத்திய மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 168 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2023 பிரிவு 259–(1) E பிரகாரமும், 6 ஆண்டுகளுக்கு மேல் வரிவிதிப்பு செய்ய மாநகராட்சிக்கு அதிகார வரம்பு இல்லை. மேலும், மதுரை மாநகராட்சி சட்டம் 1971ம் வருடத்திய மதுரை மாநகராட்சி சட்டம் 48ன் பிரகாரம் 12 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வரி இனங்களை வசூலிக்க மதுரை மாநகராட்சிக்கு அதிகாரம் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

3) மேற்கண்ட புகார் மனு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, மதுரை மாநகராட்சி, மண்டலம் 3ன் உதவி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவ அறிவிக்கை நாள் 02.09.2024ன் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

4) மதுரை மாநகராட்சி, மண்டலம் 3ன் உதவி ஆணையர் தன்னுடைய 23.09.2024 நாளிட்ட கடிதத்தில்,

“மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 (மத்தியம்) வார்டு 52, கதவு எண்.52, 52A அம்மன் சன்னதி தெரு, சொத்து வரி உயர்வினை ஆட்சேபித்து மாணிக்கா R.M.சங்கர நாராயணய்யர் அன்னதான தர்ம டிரஸ்டின் அப்போதைய டிரஸ்டியான M.N.ராதாகிருஷ்ணன் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD) No.163/2012 மற்றும் W.M.P.(MD) No.1 & 2/2012 தொடரப்பட்டு 08.09.2022 நாளிட்ட தீர்ப்பாணையின்படி மனுதாரரின் கட்டிடம் மறு அளவீடு செய்து 01.04.2008 முதல் திருத்திய சொத்துவரி கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி கேட்பினை ஆட்சேபித்து மீண்டும் மாண்புமிகு மதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண்.O.S.191/2022 திரு.M.R.சுப்ரமணியன் டிரஸ்டி என்பவரால் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் வழக்கின் இறுதி தீர்ப்பின் அடிப்படையில் கோரிக்கை பரிசீலனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் தெரிவித்து ஏற்கனவே மனுதாரருக்கு இது தொடர்பாக 13.02.2024 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

5) மனுதாரரின் மனுவின் மீதான மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையரின் அறிக்கையில் மனுதாரர் தன்னுடைய புகார் 06.08.2024 மனுவில் கோரியுள்ள நிவாரணம் தொடர்பாக ஏற்கெனவே மாண்பமை மதுரை மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.O.S.No.191/2022 நிலுவையில் இருப்பதாக தெரிவித்துள்ள நிலையில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தொடர்பாக வழக்கு நிலுவையில் இருக்கும்பட்சத்தில் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) இல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters related

(a) xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1952 or any matter pending before the Court.

(c) xx x

எனவே மேற்கண்ட சட்டபிரிவின்படி மனுதாரரின் 06.08.2024 நாளிட்ட மனு மீது விசாரணை மேற்கொள்ள வழி வகை இல்லை என்று இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29–நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்:

1) திரு.M.R.சுப்பிரமணியன்,
மேனேஜிங் டிரஸ்டி,
12/26, நவரத்தினபுரம் 1வது தெரு,
காமராஜர் சாலை,
மதுரை–09.

2) உதவி ஆணையாளர்,
மண்டலம் 3 (மத்தியம்),
மதுரை மாநகராட்சி,
மேலமாரட் வீதி,
மதுரை–625 001.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் சென்னை–600 032